# Human Values in the Works of A. Madhavan

**Dr. C. Jessy Rose**
*Associate Professor, Department of Tamil*
*S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346750

**Abstract**

*A. Madhavan holds a significant place among modern Tamil writers. Having written for over half a century, his works have not been adequately recognized in our critical world, resulting in the obscurity of a major literary figure. His creations, which convey the realities of life with subtlety and without any embellishment, discuss the virtues of human existence. They reveal the innate moral sense within the human mind without resorting to exaggeration or melodrama. This uniqueness is expressed through a simple narrative style that maintains artistic integrity. In his stories, most focus on the lives of the street dwellers of Thiruvananthapuram. During the period when he was actively writing, his literary world was not properly approached by anyone. He was recognized merely as a realist writer who observed human values through the events of daily life. However, his fiction, which skillfully employs local dialects and portrays human nature without any moralizing, should be subjected to thorough research. The naturalistic characters within his stories naturally depict human values. A detailed examination of this is essential. In human relationships, lack of compassion, enmity, exploitation, betrayal, violence, lust, and murder occur naturally. The characters who embody these traits roam freely in A. Madhavan's fictional world. Through the journey of his stories, this article highlights the moral consciousness of the street dwellers he portrays.*

***Keywords:*** *Virtue, Social Behavior, Humanity, Anthropology, Aesthetics, Fiction, Fictional Space*

**Supplementary Books**

1. Sivathambi, K. (1983), Religion and Humanity in Tamil Literature, Tamil Puthakalayam, Chennai.
2. Bhaktavatsala Bharathi (2008), Tamil Humanism, Meyyappan Tamil Research Centre, Puducherry.
3. Ponneelan (2007), Jeeva Endroru Manudan, New Century Book House, Chennai.
4. Madhavam (August 2016), Madhavam Magazine, Rasakkamangalam, Kanyakumari District – 629502.
5. Madhavan, A. (2016), Stories (Complete Collection), Nattrinai Publications, Thiruvallikeni, Chennai – 6. Muthu, S. (2015), A. Madhavan's Literary Footprints, Arul Publications, Chennai – 78.
6. Jayamohan (2010), The Artist of Kadaitheru: A. Madhavan's Fictional World, Tamilini, Chennai – 14.
7. The Encyclopaedia Britannica: A Dictionary of Arts, Sciences, Literature and General Information, Volume 15, 2011.

# ஆ.மாதவன் படைப்புகளில் மானுட மதிப்பீடுகள்

*முனைவர் கோ. ஜெஸிறோஸ்*
இணைப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு

***ஆய்வுச் சுருக்கம்***

*நவீனத் தமிழ் எழுத்தாளர்கள் வரிசையில் மிக முக்கியமான இடம் ஆ.மாதவனுக்கு உண்டு. அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக எழுதி வந்த ஆ.மாதவனை, அவரின் படைப்புகளை முறையாக நமது விமர்சன உலகு கண்டு கொள்ளாததன் விளைவு மிக முக்கியமான ஒரு படைப்பாளி அடையாளம் தெரியாது போனார். வாழ்வின் யதார்த்தங்களை உணர்ந்து அதனை எவ்வித ஆடம்பரமும் இன்றி மென்மையுடன் பரப்பும் இவரது படைப்புகள் மானுட வாழ்வின் அறம் பற்றிப் பேசுபவை. மனித மனம் வெதும்பலையோ குறுகுறுப்பையோ அடையாமல் அதனுள் பொதிந்துள்ள அறஉணர்வை வெளிக்காட்டுபவை. இந்தத் தனித்தன்மையை எளிமையான நடைமூலம் கலைத்தன்மை குறையாது வெளிப்படுத்தி வருபவர்தான் ஆ. மாதவன். இவரது கதைகளில் பெரும்பாலானவை திருவனந்தபுரத்துச் சாலைத்தெரு மக்களைப் பற்றியவை. அந்தப் படைப்புலகை அவர் தீவிரமாக எழுதிய காலத்தில் முறையாக யாரும் அணுகவில்லை. மனித மதிப்பை, அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்டு அவதானிக்கும் வெறும் யதார்த்தப் படைப்பாளியாகவே ஆ.மாதவன் கவனப்படுத்தப்பட்டிருக்கிறார். மாறாக வட்டார வழக்கைத் திறம்படக் கையாண்டு, மானுட அறம் பற்றிய எவ்வித அலட்டலும் இல்லாமல் மனிதனின் இயல்பான சுபாவத்தைக் கலைவடிவில் வெளிக்காட்டிடும் அவர் புனைபுலகை முறையாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். மானுட மதிப்பீட்டைக் கலைக்கும், இயல்பான சித்திரங்கள் இவரின் கதைவெளிக்குள் வெகு இயல்பாக வெளிக்காட்டப்பட்டுள்ளன. இதனை நுணுகிப் பார்த்தல் அவசியமான ஒன்று. மானுட உறவுகளில் இரக்கமின்மை, பகை, ஏய்ப்பு, துரோகம், வன்முறை, காமம், கொலை என இவையாவும் இயல்பாக நிகழ்கின்றன. இதை உள்வாங்கிய மனிதர்களே ஆ.மாதவனின் கதைவெளிக்குள் உலாவுகின்றனர். இவரின் புனைவுகளில் உள்ள அசலான குணங்களுடன் நடமாடும் கதைமாந்தர்களின் வழி சரியும் மானுட மதிப்பீடுகளை அசலாக அடையாளப்படுத்தும் வகையில் ஆ.மாதவன் படைப்புகளில் மானுட மதிப்பீடுகள் என்னும் இக்கட்டுரை அமைகிறது. இவ்வாறு அவரின் கதைகளினுடாகப் பயணம் செய்து அவர் புலப்படுத்திக் காட்டும் சாலைத்தெரு மக்களின் அற உணர்வுகளை வெளிக்காட்டுகிறது இக்கட்டுரை.*

***திறவுச் சொற்கள்:*** *அறம், சமூக நடத்தை, மானுடநேயம், மானுடநெறி, அழகியல், புனைவு, புனைவுவெளி.*

**முன்னுரை**

நவீனத் தமிழின் தனித்துவமான படைப்பாளிகளில் ஒருவர் ஆ.மாதவன். புகைப்படத் துல்லியத்துடன் புறவய உலகைச் சித்தரிக்கும் அழகியல் வெளிப்பாடு கொண்ட தமிழின் முதன்மைப் படைப்பாளி. மானுட அகத்தின் தீமையை ஊசிமுனைக் கூர்மையுடன் தொட்டுக்காட்டும் படைப்புகளுக்குச் சொந்தக்காரர். தமிழும் மலையாளமும் புழங்கும் திருவனந்தபுரத்து வாழ்க்கை அவரது படைப் புலகுக்குப் பண்பாட்டுச் செறிவைக் கூட்டியது. இரு மொழிகளின், இரு மரபுகளின் கலப்பில் உருவான வாழ்க்கையையே தனது படைப்பின் மையமும் பொருளுமாகக் கொண்டிருக்கிறார் ஆ.மாதவன். திருவனந்தபுரத்துச் சாலைக் கடைத் தெருவின் கதைசொல்லி. இத்தெருவின் வாழ்க்கையைப் பற்றி மட்டுமே அவர் எழுதியுள்ளார். பிச்சைக்காரர் முதல் பெரும் வணிகர் வரை அனைவருமே ஒருவரை

ஒருவர் எத்திப்பிழைக்கும் அவல வாழ்வின் குறியீடாக இத்தெரு அவருக்குள் விரிகிறது.

கடைத்தெரு மக்களின் வாழ்க்கை காமமும், வன்முறையும், பசியும், அவநம்பிக்கையும், வெறுமையும், ஒருவரோடு ஒருவர் ஒட்டிக் கொள்ளும் தீவிரமான உறவுகளும் நிறைந்தது. அங்கு கருணை, நேசம், இரக்கம் போன்றவற்றிற்கு இடமில்லை. பணத்தை மட்டும் மையமாகக் கொண்ட ஒரு இரண்டாம் தர மக்களின் குழுமமாகவே அத்தெரு விளங்குகிறது. ஆகவே அடிப்படை மானுட மதிப்பீடுகளுக்கு அங்கு இடமில்லை. ஒழுக்கம் சீர்குலைகின்ற தரநிலைச் சமூகத்தில் மதிப்பீடுகளுக்கு இடமில்லாது போனதில் வியப்பில்லை என்றாலும் திருவனந்தபுரத்துச் சாலைத்தெரு இவ்விதமாகவே ஆ.மாதவனால் முன் வைக்கப்படுகிறது. மனித மனதின் மாற்றங்கள் எப்படி மானுட மதிப்பீடுகளைச் சீர்குலைக்கின்றன என்பதற்கு மாதவனின் கதைகள் உதாரணங்களாகின்றன. இதில் வருகின்ற கதாப்பாத்திரங்களை நாம் கூர்ந்து கவனித்தால் அவர்கள் அனைவரும் பொதுத் தளத்தில் இருந்து விலகிய மனிதர்களாக இருப்பது புலனாகும். அவர்களுக்கென்று தனியாக இலட்சியங்களோ, கனவுகளோ இருப்பதில்லை. தற்செயலான ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழ்பவர்கள் என்ற எண்ணமே வாசகருக்கு உருவாகும். அதுவே உண்மையும் ஆகும். பிச்சைக்காரர்கள், பொறுக்கிகள், தரகர்கள், ஏமாற்றிப் பிழைப்பவர்கள், வேசிகள், வஞ்சம் கொண்டு திரிபவர்கள் என இவர்கள் அனைவரையும் கொண்ட அத்தெருவில் மானுட மதிப்பீடுகளுக்கு இடமில்லாது போனதில் வியப்பேதும் இருப்பதில்லை. ஆ.மாதவனின் கதைகளில் திரும்பத் திரும்ப சொல்லப்படுவது இதுதான், மதிப்பீடுகளால் சரியும் அவல வாழ்க்கை. இதுவே ஆ.மாதவனின் படைப்புகளின் மையம். இவ்வாறு சாலைத்தெரு மக்களின் வாழ்க்கையைக் குறியீடாகக் கொண்டு, அதில் சரிகின்ற மானுட மதிப்பீடுகளை, அவரின் படைப்புகளை முன்வைத்துக் கொண்டு காணலாம்.

**மானுடம் விளக்கம்**

“மானுடம்” எனும் சொல் இன்று பல்வேறு களங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. இச்சொல் இந்நூற்றாண்டின் துவக்கத்தில் தான் கவனம் பெறத் தொடங்கியது. மனிதன், மானுடன், மானிடன் என்னும் சொற்களே பேச்சு மொழியிலும் இலக்கியங்களிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவற்றைக் காட்டிலும் விரிவாகப் பொருளில் “மானுடம்” என்னும் சொல் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மானுடம் என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் பலர் விளக்கம் தந்துள்ளனர்.

மனிதனை, அவன் இயல்பினை, அவன் ஆக்கத்தினை வரலாறு இலக்கியம் கலை ஆகியவற்றின் மையக் கருத்தாகக் கொள்ளும் மெய்யிலும் கண்ணோட்டமும் மானுடம் (ஹியூமனிஸம்) எனப்படும் என்கிறார் கா.சிவத்தம்பி *(1983 : 129)*.

தமிழில் மனிதன், மானுடன், மானிடன் ஆகிய சொற்கள் கிட்டத்தட்ட ஒரே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் மனிதன், மானுடன், மானிடன் ஆகிய சொற்களிடையே வேறுபாடுகள் உள்ளன. மனிதன் என்ற சொல் உயிரியல் ரீதியாக ஒரு குறியீட்டுச் சொல் மானுடன் என்ற சொல் உயர்ந்து சென்று மனித குலம் முழுமைக்குமான சொல்லாக விளங்கி நிற்பது ஆக இவ்விரு சொற்களிடையே பொருண்மையில் வேறுபாடு இருப்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஒட்டு மொத்தமான மனித இனத்தை, மனித இனப்பண்பை, காட்சிப் பொருளாக அன்றி கருத்துப் பொருளாக இருக்கும் மனித இயல்பைக், காலமும் இடமும் கடந்து மனிதர் அனைவரையும் அவர்தம் மாண்புகள் அனைத்தையும் உள்ளடக்கிக் காட்டும் மனிதப்பாங்கை மானுடம் எனும் சொல்

உணர்த்துகிறது என்கிறார் பொன்னீலன் (2007: 349).

மனித குலத்தின் அடிப்படைச் சிக்கல்கள் அனைத்தும் அதன் உயிரியல் வேறுபாடுகளிலும், பண்பாட்டு வேறுபாடுகளிலும் புதைந்துள்ளன என்பார் பக்தவத்சல பாரதி (2008: 29). எனவே மனிதனைப் பற்றி அறிந்து கொள்வதில் மானுடவியலைப் பற்றிய அறிவு தேவையாகிறது. மானுடவியலின் அறிவுப் பரப்பும், பயன் பாடும் மிக விரிவானது. இதைக்கொண்டே ஒரு மனிதன் இன்னொரு மனிதனைப் பற்றி புரிந்து கொள்ள முடியும். மனித இனங்களில் நிலவும் வேறுபாடுகளின் அடிப்படைகளை உயிரியல் நிலையிலும், பண்பாட்டு நிலையிலும் புரிந்து கொள்ள மானுடவியலின் அடிப்படைகளை அறிந்திருத்தல் அவசியம். இவ்வடிப்படைகள் உயர்வு தாழ்விற்கு இடமளிக்கவில்லை என்பதைப் புரிய வைக்கிறது. அனைத்திற்கும் மேலாக மனித நேயத்தைக் கற்பிக்கும் பேராற்றல் கொண்டதாக விளங்குகிறது. இனம், மொழி, சமயம் ஆகிய அனைத்து எல்லைகளையும் உடைத்து மானுட மதிப்பீடுகளை முன்னிறுத்தும் பண்பைக் கொடுக்கிறது.

Humanism is the attitude of mind which attaches primary importance to man and to his faculties, affairs, temporal Aspirations and well being என்று என்னை சக்ளோபீடியா பிரிட்டானிக்கா என்ற களஞ்சிய நூல் குறிப்பிடுகிறது. (Vol.II, P.876).

இவை போன்ற வரையறைகளும் விளக்கங்களும் மானிடத்தின் மதிப்பீட்டை, செயலாக்கத்தை வெளிக்காட்டி நிற்பனவாக உள்ளன. இதனைக் கொண்டு ஒட்டு மொத்தமான மானுடத்தின் மதிப்பீடுகளைப் பிற அறிவுத்துறைகளுடன் ஒப்பிட்டு மனித குலத்தின் இயல்புகளை நாம் வரையறுக்கலாம் என்றபோதும் ஆ. மாதவனின் புனைவுகளில் வரும் சாலைத் தெரு வாழ்க்கையை இப்பார்வையில் நாம் அணுகலாம்.

**ஆ.மாதவனின் புனைவுவெளி**

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி ஆலயத்தின் முகப்பில் நின்று பார்த்தால் தெரியும் நீண்ட தெருவே சாலைத்தெரு. இதற்குள்ளாகப் பல வரலாறுகள் பொதிந்துள்ளன. மட்டுமின்றி கொடுக்கல், வாங்கல், வியாபாரங்கள் இரவு பகலாக நடந்து வருகின்ற வணிகக்களமே ஆன வியாபாரச் சந்தடி அத்தெரு. ஆனாலும் அதனுள்ளே உயிர்ததும்பும் வாழ்க்கை உள்ளது. சாலைக்கடைத் தெருவைப் பற்றிப் பேச விவாதிக்க என்ன இருக்கிறது? என்ற கேள்வியை எழுப்பினால் அதற்கான விடையாக ஆ.மாதவனின் ஒவ்வொரு சிறுகதையினையும் தரலாம். ஒரு தெருவைப் பற்றி கிட்டத்தட்ட முந்நூறுக்கும் அதிகமான கதைகளில் விவரித்துள்ளார் ஆ.மாதவன். அத்தெருவின் சுற்றுச் சூழல் அதற்கு இடம் தந்திருக்கிறது. நுணுக்கமான வர்ணனைகள், ஆழ்ந்த நோக்கு, தட்டுத் தடங்கலில்லாத நடை இவையெல்லாம் சேர்ந்து ஆ.மாதவனின் கதையைச் சுவாரஸ்யமான கலைப்படைப் பாக்குகின்றன. அத்தெருவினைப்பற்றி விவரிக்கையில் அதன் சுற்றுப்புறத்தைப் பற்றிய அவதானிப்பை நம்முன் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார் ஆ.மாதவன்.

“இப்பொழுது எல்லாம் தெளிவாகத் தெரிகிறது. அதாவது குடித்தால் இருட்டு வந்துவிடுகிறது. விடிந்தால் வெளிச்சம் வந்து விடுகிறது. வெளிச்சத்தில் உண்மை தெளிவாகத் தெரியும் என்று “அந்தரங்கம்” என்ற கதையில் ஆ.மாதவன் கூறுவது தத்துவச்சாரம் அல்ல. அது சாலைத் தெருவின் புறச்சித்திரம். சாலைத்தெரு வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுப் போன ஒவ்வொரு கதைமாந்தனும் ஆ.மாதவனின் கதையில் மிளிர்வதற்கு இதுவே அச்சாணி. குடியும், களவும், ஏமாற்று வித்தையும், வன்முறையும், காமமும், அலைக்கழிப்பும், உதாசீனமும், வெறுப்பும், கேலியுமான தலை கீழான அறவாழ்வினைக் கொண்டிருப்பது அத்தெரு வாழ்க்கை.

## கேள்வியாகும் அறமதிப்பீடுகள்

"அறம்" என்ற பொதுச்சொல் பல பொருண்மைகளைக் கொண்டது. மாறு பாடு கொள்வது. இன்று நாம் அறமாகக் கருத முடிவது பிறிதோர் காலத்தில் அறமில்லாததாகக் கருதப்படலாம். சங்க இலக்கியங்களில் பரத்தையர் ஒழுக்கமும், புலால் விரும்புதலும், மது அருந்ததுதலும், உயிர்க்கொலை புரிதலும் அன்றைய வாழ்வின் இயல்பான அறமாகக் கருதப்பட, கீழ்க்கணக்கு நூற்காலங்களில் சமண பௌத்த கருத்தாக்கங்களுக்கு உட்பட்டு இவை அறமில்லாத, வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவைகளாகக் கருதப்பட்டன. இச்சூழலில் அறம் குறித்த விளக்கத்தினை வரையறுத்துக் கொள்வது கடினம் என்றாலும் அறம் என்பதற்கு மனமாசு அகற்றிய மக்களது ஒழுகலாறு (சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், ப.117) என்ற பொது வரையறையை மட்டும் அதற்கான விளக்கமாகக் கொண்டு கட்டுரையைத் தொடரலாம்.

இலக்கியம்னு சொல்லக் கூடியது தத்துவப் போதனை அல்ல. தத்துவப் போதனையாகவோ அல்லது நேர்மையைப் போதிக்கிற மாதிரி அவர்களுக்குக் கல்வியைப் போதிக்கிறது அல்ல. வாழ்க்கையைச் சொல்வது. வாழ்க்கையின் உண்மையைச் சொல்லக் கூடியது தான் நல்ல இலக்கியம். கட்டுப்பாடான உண்மையைத் தான் சொல்லணும். அதுதான் இலக்கியம்னு நான் நினைக்கின்றேன். வெறும் கதை சொல்வது மட்டுமல்ல இலக்கியம் என்னுடைய படைப்புகள் பெரும்பாலும் அப்படித்தான். கதைகள் சொல்வதற்காக இலக்கியம் சொல்வதில்லை (மாதவம், 2016:22) என்று கூறும் ஆ. மாதவன் இலக்கியத்தையே வாழ்க்கையாக உணர்ந்து வெளிக்காட்டி வருபவர். அதில் பொழுதுபோக்கிற்கோ கேளிக்கைக்கோ துளியும் இடமில்லை என்பதை அவரின் கதைகளை வாசிக்கையில் வாசகன் உணரமுடியும். ஆ. மாதவன் தன் படைப்புகளில் சாலைத்தெருவின் வாழ்க்கையை மிக விரிவாக முன்வைக்கிறார். வழக்கமான மதிப்பீடாக இல்லாமல், காதல், காமம், நடுத்தர வர்க்கம் எதிர்கொள்ளும் அல்லல்கள், குடும்பச்சிதைவு, வறுமை, சாதிப் பிரிவினைகள், வேலை இன்மையால் சிதையும் சமூகம், குடிசார்ந்த பிரச்சனைகள், அறம்பிறழும் உறவுகள், பெண்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சனைகள் என தீமை நடமாடும் சாலைத்தெரு வாழ்க்கையில் இவை ஒவ்வொன்றும் அங்கங்களாகிப் போயுள்ளதை அவரின் தன் படைப்பினுள்ளே வெளிக் காட்டுகிறார்.

## தீமை எனும் அழகியல்

தனிமனிதனின் வாழ்வு சீராக இயங்க அவன் சில நெறிமுறைகளைக் கைக் கொண்டாக வேண்டும். இதுவே அவனுக்கான அறமாக, ஆ.மாதவன் கருதுகிறார். ஆ.மாதவனின் பாதிக்கும் மேற்பட்ட அவரது கதைகளின் களம் சாலைக் கடைத்தெரு மட்டுமே. இவரைப் போல கிட்டத்தட்ட ஒரே கதைக் களத்தை (தெருவை) வெளிப்படுத்தியது மலையாள எழுத்தாளர் எஸ்.கே. பொற்றேகாட் மட்டுமே என்கிறார் ஜெயமோகன். (2018:35) ஆ.மாதவனின் கதைகளில் சாலைத் தெருவின் தூசு கூட கதாப்பாத்திரமாகி விடுகிறது. தன்னுடைய இயல்பான இயற்பண்பு வாதத்தால் (Naturalism) சாலைத்தெருவின் சகலத்தளங்களையும் கதையினூடாகத் தொட்டுவிடுகிறார். இதற்கான மையமாக ஒரு வகையான "சாலை அறத்தைப்" போதிக்கிறார்; ஆ.மாதவன். இவ்வறத்தினில் பிழைப்பு மட்டுமே ஒரே நோக்கமாக விளங்குவதைக் காண முடிகிறது. தெருவைப் பற்றிய கவர்ச்சியான போலி வர்ணனைகள் அதில் இருப்பதில்லை. அன்றாட வாழ்க்கை யதார்த்தத்தினால் அது கட்டமைத்துக் காட்டப்படுகிறது. அங்கு வாழும் எளிய அடித்தட்டு மக்களும் எளிய அறவுணர்வுடனே காலத்தைக் கடத்துகின்றனர். இவ்வெளிய

அறம் என்பது சாலைத்தெருவில் பிழைப்பை ஓட்டுவதற்கான செயல்கள் மட்டுமே. ஆகவே பிழைப்பிற்காக உலகியல் ஒழுக்கங்களை மீறும் நிகழ்வுகளே ஆ. மாதவனின் கதைப் பரப்பெங்கிலும் காணமுடிகிறது. சுருங்கச் சொன்னால் அவர் சாலைத்தெருவில் வாழும் தனிமனிதனின் தீமையை மட்டுமே இயல்பானதாகக் காட்டுகிறார். அதற்கான காரணங்களைத் தேடித் தேடியே ஒவ்வொரு கதையும் நகர்கிறது. காமமும், வன்முறையும், பசியும், வெறுப்பும், அவ நம்பிக்கையும், வெறுமையும் உழல்கின்ற சாலைத்தெரு வாழ்வில் அறமாக வேறெதைக் கொள்ள முடியும்? என்பதே ஆ.மாதவனின் கதைகளை வாசித்து முடிக்கையில் ஒவ்வொரு வாசகனுக்கும் எழும் கேள்வியாக உள்ளது.

விசுவரூபம் கதையில் அனந்து ரெட்டியார் கடையில் தானியம் புடைத்து வாழ்க்கை நடத்தும் ஏக்கியம்மாவாக இருக்கட்டும், எட்டாவது நாள் கதையில் வரும் பட்டாணியாகட்டும், காளை கதையில் வரும் சிவம் பிள்ளையும், ஈடு கதையில் வரும் மாடசாமியும், பறிமுதல் கதையில் வரும் அப்புக்குட்டனும், பாச்சி கதையில் வரும் நாணுவும் சாலைத் தெருவில் பிழைப்பதற்காக “தன்னறத்தை” வெளிக்காட்டும் பாத்திரங்களாகும். இவர்களைப் போல கதை தோறும் ஒவ்வொரு பாத்திரத்தையும் சாலைத் தெருவின் அறத்தைக் காட்டும் பாத்திரங்களாகச் சுட்ட முடியும். ஏனென்றால் சாலைத் தெரு தனக்கென ஒரு வாழ்க்கை அறத்தை வைத்துக் கொண்டு அங்கு வாழும் மக்களுடே கண்ணாம்பூச்சி ஆட்டம் ஆடுகிறது. அது தன் இயல்புக்குப் பொருந்தாத எவரையும் விட்டுவைப்பதில்லை. எளிய குடும்பப் பெண்ணின் தேவைகளை நிவர்த்தி செய்து ஒழுக்கமுடன் வாழும் ஏக்கியம்மாவைக் கூட, ஒரு கட்டத்தில் பணத்திற்காகச்சாலைத் தெருவின் “அறத்திற்குக்” கட்டுப்பட்டு விடுகிறாள். இதன் மூலம் அத்தெரு வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டும் விடுகிறாள். இதைப்போலவே அழுகை கதையில் வரும் சாரதாவும் சாலைத்தெருவின் லௌகீக வாழ்க்கைக்குத் தேவையானதைப் புரிந்து கொண்டு விடுகிறாள். அவள் பிறந்து வளர்ந்த திட்டுவிளையில் ஒழுக்க நெறிக்கு முரணான வாழ்வை அவள் கற்பனை கூட செய்து பார்த்திருக்கவில்லை. ஆனால் தற்போது அவளும் தன் கற்பை டாக்டரிடம் விற்று வாழும் சாலைத்தெரு இயல்புக்குப் பழகிப்போய்விட்டாள். அவளின் அழுகைக்குக் காரணம் கூடுதலாகக் கிடைத்த நூற்றைம்பது ரூபாய் பணம் அல்ல என்பதை ஆ.மாதவன் அமைதியாக உணர்த்திவிடுகிறார். சாலைத் தெரு யாரையும் உடனே தன்னுள் அனுமதிப்பதில்லை அதைப் போலவே யாரையும் வெகுசீக்கிரம் விட்டுவிடுவதும் இல்லை. இதுவும் அதன் இயல்பான அறமாகும். காவல் கதையில் வரும் அம்ஸன் கூர்க்கா மட்டுமல்ல அத்தனை கூர்க்காக்களும் ஒன்று தான். ஒருமுறை சாலைத்தெருவுக்குப் பழகிவிட்டால், திரும்புவது கடினம். இது தான் சாலைத்தெருவின் அறம். இயல்பாகப் பழகும் பாபு கூட, அம்ஸன் கூர்க்காவை இரண்டுமாதம் கழித்துப் பார்த்த போதும்,

உக்காரு நல்லாவே உக்காரு. வியாபாரத்துக்கு இடஞ்சல் இல்லாமலிருந்தால் சரி (ஆ.மாதவன் கதைகள், ப.507) என்று சொல்ல வைக்கிறது. சாலைத் தெருவுக்குப் பணம் ஒரு அடிப்படை வாழ்வாதாரம். இவ்வறத்திற்குத் தோதாக இருக்காத எவரும் அங்கு நீடிப்பதில்லை. ஆனால் இங்கு இருக்கும் அனைவரும் இவ்வறத்தை உணர்ந்து விடுகின்றனர்.

சமூக ஒழுங்கைப் பேணும்பொருட்டு உருவாக்கப்பட்ட விதிமுறைகளும் நடைமுறைகளும் ஒழுக்கம் எனப்படுகின்றன. இவ்வொழுக்கத்தை மீறுவது தன்னளவில் தீமையானதும் சமூக அமைப்பைக் குலைப்பதுமாகும். இவ்வகையான குலைப்புகளை, மீறல்களை உலகின் அனைத்து மதக் கூட்டங்களும் தீமையானவையாகக் கூறின.

இவை தவிர்க்கப்பட வேண்டியவைகளாகச் சொல்லித் தரப்பட்டன. ஆனால் இலக்கியங்கள் வாழ்வின் மீறல்களிலிருந்தும் தீமைகளிலிருந்தும் தன்னெழுச்சியைக் கட்டமைப்பவைகளாக உள்ளன. எனவேதான் ஜெயமோகன், உலகின் மேலான இலக்கியப் படைப்புகள் மானுட மேன்மையைக் குறித்துக் கவலைப்படுகின்றன் மனித கீழ்மையைப் பேசுகின்றன *(2010 : 51)* என்கிறார். அவ்வகையில் ஆ.மாதவனின் கதைகளும் மனிதனின் கீழ்மையைப் பற்றியே அதிகமும் பேசுகின்றன. அதில் இயல்பான மனிதன் கீழ்மையில் இருந்து தான் வெளிப்படுகிறான். அதுவே அவனின் வாழ்தல் அறமாக உள்ளது. சாலைத் தெருவில் அன்பு, காதல், இரக்கம், பரிவு, உதவி, நேர்மை என எதுவும் இல்லை. அங்கு ஜீவிப்பதே வாழ்க்கை. அதுவே அங்கு அறம்.

**சாலைத்தெரு வணிகம்**

சாலைத்தெரு ஒரு வணிகக்களம். அங்கு கொடுக்கல் வாங்கல் மட்டுமே கவனிக்கப்படும். இதில் ஏற்படும் பரஸ்பரமும் சிறிது நேரமே நீடிக்கும். எனவே அதிதீவிரமான வாழ்க்கைப் போராட்டம் நிகழும் மையமாகச் சாலைத் தெரு விளங்குவதில் ஆச்சரியம் ஏதும் இருப்பதில்லை. இப்போராட்டத்தில் ஒவ்வொருவரும் தனிமனிதர்களாகவே இயங்குகின்றனர். எந்நேரமும் வணிகமே அவர்களது ஒரே குறி. இதனால்தான் அவர்களால் இவ்வட்டத்தை விட்டு வெளியே வரமுடிவதில்லை.

*கொத்துவால் தெருவிலே, நாலு அரிசி வண்டி, புண்ணாக்கு வண்டி பின்னாலே போனாலே, தினம் ஒரு ரூவா, ஒண்ணே கால் ரூவா கெடக்குமே இதைவிட்டு சொந்தக்காரன் தயவுக்குப் போனா அவன் இளக்காரத்தைச் சுமக்கணும். (ஆ.மாதவன் கதைகள், ப.335)* என்று பதினாலு முறி கதையில் வரும் வீரய்யன் கூறுவதில் சாலைத் தெருவின் வணிகநோக்கு புலப்படுகிறது.

*சங்கதியெல்லாம் சரி சேட்டுக்கிட்டே நம்ப பங்கு மட்டும் குறையாமெ வாங்கித் தந்திரணும் உன் கருமாறி காரியம் பாத்துக்கோ வரட்டா சாயந்திரம் கொஞ்சம் மினுங்கணும.; (ஆ.மாதவன் கதைகள், ப.358).*

என்று சாக்கடை சுத்தம் செய்யும் ஊழியனான கோவிந்தன் “பாச்சி” கதையில் கூறும் இடத்திலும் சாலைத் தெருவின் “பொது அறம்” புலப்படுவதைக் காண முடிகிறது. இயல்புவாதத்தின் மிக முக்கியமான சிறப்பியல்பு தீமையைப் பற்றிய அதன் மனோபாவம்தான். ஆ.மாதவனின் படைப்புகளில் மாந்தர்களின் ஒழுக்கமற்ற நிலைப்பாடு ஓங்குவதற்குக் காரணம் அவர் இயல்புவாதத்தின் அப்பட்டமான யதார்த்தத்தைக் கொண்டிருப்பதுதான். மனித இயற்கையை அது மறைக்கவோ, மறுதலிக்கவோ எப்போதும் முயலாது எனவே தீமையை அது அம்மணமாக வெளிப்படுத்துகிறது. ஒருவகையில் சாலைத் தெருவிற்குண்டான அறமும் அதுவேயாகும். இதே திருவனந்தபுரத்து வாழ்க்கையை வெளிப்படுத்திக் காட்டிய நீல. பத்மநாபன் கூட சாலைத்தெரு வாழ்க்கையை ஆ.மாதவன் அளவுக்கு வெளிக்காட்டவில்லை என்பது இங்குச் சுட்டத்தக்கது. ஒரு படைப்பாளி தன் படைப்புலகில் உருவாக்கும் புற வாழ்க்கையின் பல்வேறு தரிசனங்களின் மூலமே அவன் கவனிக்கப்படுகிறான். அதில் அவன் உருவாக்கிக் காட்டும் தரிசனங்கள் நிறைவடைய உகந்த களமாகப் புற ஒழுங்கு அமைவதுதான் மிக முக்கியம். காரணம் குறிப்பிட்ட களத்தையே மீண்டும் மீண்டும் கூறப்படுவதினால் புற ஒழுங்கு ஒருவித இயந்திரத்தனத்திற்கு உள்ளாக்கப்பட்டுவிடும். பின்பு அதில் புதிதாகக் கூற படைப்பாளிக்கு ஒன்றும் இல்லாது போக வாய்ப்புண்டு. ஆனால் ஆ.மாதவனுக்கு இது ஏற்படவில்லை என்பதே வியப்பு. அவர் திரும்பத் திரும்ப ஒரே சாலைத்தெரு வாழ்க்கை குறித்து எழுதினாலும் கூட அவ்வாழ்க்கை நமக்கு சலிப்பு தட்டுவதில்லை. காரணம் சாலைத்

தெரு வாழ்க்கையில் புதிதாகக் கூற நித்தம் நித்தம் ஒரு நிகழ்வு நடக்கிறது.

பட்டாணி இருந்து அழுதுகிட்டா இரிக்கேரு?... எந்திரிச்சு வாரும்... போவோம்..., நாறப்பயக்க... சுண்டைக்கா மோன்மாரு... இதெல்லாம் இந்தச் சாலைக் கடைக் கெகுற்றம்.. நல்ல ஆளுகளுள்ள இடமானா நாதியிருக்குமே. ஆரெ குற்றம் சொல்ல... எல்லாம் தலெலெ எழுத்து... (ஆ. மாதவன் கதைகள், ப.242) என்று பட்டாணியிடம் கோவிந்தன் கூறுமிடம் இதற்குத் தக்கதோர் சான்று. சாலைத் தெருவில் அறமில்லை. ஆனால் அதுவே சாலைத்தெருவின் அறம். ஒரு விதத்தில் இதுதான் சாலைத்தெருவின் சுவாரஸ்யத்தைக் கூட்டுகிறதோ? என்ற ஐயம் ஏற்படுகிறது. மட்டுமின்றி புற உலகு கட்டமைக்கும் ஒழுங்குகள் அங்கு கட்டமைக்கப்படுவதே இல்லை. ஒழுக்கம் மீறிச் செல்லும் வாழ்க்கையே இயல்பானதாக நிகழ்கிறது. ஒருவிதத்தில் வாசனை ஈர்க்கச் செய்யும் ஈர்ப்பு இதிலுள்ளதை அவதானிக்க முடிகிறது. தற்கால சினிமாக்களில் வில்லத் தனத்தோடு குறும்புகள் பல செய்யும் நாயகனுக்கு வரவேற்பு அதிகம் இருப்பதைப் போன்றே சாலைத்தெருவில் அறமற்றதை அறமாகக் காணுவதில் இருக்கும் சுகானு பவம் ஒவ்வொரு கதையையும் நகர்த்திச் செல்கிறது.

ஆ.மாதவன் கதைகளில் மனிதநேயம், காதல் போன்ற நுண் உணர்வுகளுக்கெல்லாம் பெரிய இடமில்லை என்றே கூறமுடிகிறது. உறவுகளுக்கு இடையில் நிகழும் ஒழுங்கீனமும், பரஸ்பரம் நுகரும் காமமும் மட்டுமே உறவுகளின் அடிப்படையாக உள்ளன (ஜெயமோகன், 2010: 78) என்று ஜெயமோன் மதிப்பிடுவது மிகச் சரியான அவதானிப்பாக உள்ளது.

இறுதியாகச் சொல்லுமிடத்து, மனிதனின் தேடலில் எப்போதுமே ஓர் அறம் சார்ந்த ஆதங்கங்கள் இருக்கின்றன. இது இதுகாறும் வரையில் நமக்குச் சொல்லித்தரப்பட்டுள்ள வாழ்வியல் அறங்களோடுதான் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருது கோளை ஆ. மாதவன் உடைக்கிறார். சாலைத் தெரு வாழ்க்கை அறம் என்பது "மனமாக அகற்றிய ஒழுகலாறு" என்பதே ஆகும். அதாவது அங்கு ஒழுங்குகளை மீற மனமாக அடைந்து விட்டோமே என்ற எண்ணப் போக்கை விட்டுவிட வேண்டும். எனவே தீமையைச் சித்தரிக்கும் அவரின் கதைகள் வாழ்க்கை பற்றிய உண்மையை நம்மிடம் கூறுவதாகவே உள்ளது. நமது வாழ்க்கை முன் பொய்யான கற்பனையைப் புற வாழ்க்கையில் உணர்ச்சி மேலிடக் காட்டி வெற்று நம்பிக்கையைப் பெற்றிட முனைவதில் யாதொரு இலாபமும் இருக்கப் போவதில்லை.

**மாறும் மனிதர்கள்**

சாலைத்தெருவின் வாழ்க்கைச் சூழல் போராட்டகூடம் நிறைந்ததாகவே எப்போதும் காணப்படுகிறது. அங்கு மானுட மதிப்பீடுகளுக்கு இடமில்லை என்ற போதிலும் அங்கும் மனிதநேயம் அவ்வொன்றும் இங்கொன்றுமாகத் தென்படுகிறது. குருஸ்வாமி, உம்மிணி, வேறு இப்படியாகப் பல பாத்திரங்களை இதற்கு உதாரணமாகச் சுட்டலாம். கிருஷ்ணப்பருந்து நாவலில் ராணி மீது காமம் கொண்டிருந்த போதும் தன்னை அதிலிருந்து வலிய விடுவித்து மானுட நேர்மையைக் கைக்கொள்ளும் குருஸ்வாமி ஆழகாகத் தெரிகிறார்.

**ராணி... விடு... என்னை!**
**வெடித்தும் சிதறியது போல அவர்**
**அவளது பிடியை விலக்கிவிட்டு உள்ளே**
**ஓடோடியும் போனார். மெல்ல**
**விளக்கேற்றி, திரியைப் பெரிதாக்கி...**
**இருராணி, எப்படியும் அவனைக்**
**கொண்டு வந்திருந்தேன்**

**(கிருஷ்ணப்பருந்து, ப.126)**

என்று மாறிவிட்ட மதிப்பீடுகளுக்குச் சாட்சியம் ஆகிறார் குருஸ்வாமி.

"உம்மிணி" கதையில் உம்மிணி எங்கிருந்தோ வந்து சாலைக்கடையில் தங்கியவன். உம்மிணி மூளை வளர்ச்சி அடையாத ஒரு மாதிரியானவன் தான். இந்த உம்மிணி, எதை யார் சொன்னாலும் கேட்பான். யாராவது வீட்டிலிருந்து கொடுப்பதை உண்டு தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். இரவில் ஏதாவது கடைத்தெருவிலோ, கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள மரத்தின் பக்கத்திருள்ள தாழ்வாரத்திலோ படுத்துக் கொள்வான். இரவில் தூக்கம் வந்துவிட்டது என்றால் மறுநாள் சூரியன் உதித்த பின்பு தான் எழுவான்.

ஒரு நாள் உம்மிணி படுத்து உறங்கிக் கொண்டிருந்த போது அவனுக்குப் பக்கத்தில் ஒரு குழந்தையைக் கொன்று வைத்திருந்தனர். காவல் துறையினர் உம்மிணியைப் பிடித்துச் சென்றனர். இதற்கு இரண்டு பேர் சாட்சிக் கையொப்பம் இட்டனர். காவலர்கள் கொடுத்த உதைகளுடன் உம்மிணி திரும்பி வருகிறான். எல்லோரும் அவனிடம் விசாரிக்கின்றனர். உம்மிணி பாவம் என்கிறார்கள். ஆனால் உம்மிணி அவர்களை இப்போது வெறுக்கிறான். அவர்களுக்கு உதிவி செய்வதில்லை. பல்லைக் காட்டிச் சிரிப்பதில்லை. அவர்கள் வீட்டில் உண்பதும் இல்லை. கோயில் பஜனையின் முன்னால் மஞ்சள் துணி உடுத்தி, கையில் தட்டும் கொண்டு "ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா" என்று எல்லார் முன்பும் செல்கிறான். எல்லோரும் இவன் உம்மிணி அல்லவா? என்று ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். காலம் அவனில் ஒரு புதிய மாற்றத்தைக் கொடுத்துவிட்டது என்கிறார் ஆசிரியர். சாலைத்தெரு மனிதர்கள் இவ்விதமாக இயங்குபவர்கள் தான் என்று குறிப்புப் பொருளை உம்மிணி பாத்திரம் வழியாகக் காட்டுகிறார் ஆ. மாதவன்.

பொருளீட்டலுக்காக உடைக்கப்படும் சமுதாய மதிப்பு எனும் ஐந்தாவது இயல், சாலைத்தெருவின் சமுதாய மதிப்பு "பொருள்" என்ற மையத்தால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளாகச் சிதறுகின்ற நிலையை வெளிக்காட்டுகிறது. ஆ.மாதவனின் படைப் புலகு முழுதும் வணிகச் சூழலையே தன் அனுபவத்தளமாகக் கொண்டது. "கடைத் தெரு கதைகள்" என்ற கதைத் தொகுப்பு கூட வணிகத்தை ஒட்டியே பெயர் பெறுவதைக் காணலாம். இங்கு அனைத்தையும் பொருள் மட்டுமே தீர்மானிக்கிறது. நட்பு எனும் சமூக மதிப்பு கூட பொருள் தேடுவதற்கான ஒரு வழியாக அமைந்து விடுகிறது. கடை அடைக்கும் நேரத்தில் வரும் நண்பனை வரவேற்றுப் பேசக் கேட்பது, அவன் மீது கொண்ட அன்பின் வெளிப்பாட்டுக்காக அல்ல. மாறாகப் பேசும் நேரத்தில் ஏதாவது வியாபாரம் நடந்து விடாதா? எனும் ஆசையின் வெளிப்பாடாகி நிற்கிறது. மாதவன் தொடர்ந்து தன் படைப்புகளினூடாகப் பதிவு செய்யும் "கீழ்மை" கூட, இந்த வணிகச் சூழலின் தாக்கம் தான். எல்லாம் பொருளுக்காக என்றாகிவிடும் நிலையில் மதிப்பீடுகள் சாரமிழந்து போவதில் வியப்பேதுமில்லை. நியாய அநியாயங்கள் பொருள் தேடும் முயற்சிகள் பார்க்கப்படுவதில்லை. அன்பு, நெகிழ்வு, ஒழுக்கநெறி முதலிய மதிப்பீடுகள் யாவும் கடைத்தெரு வாழ்வின் மதிப்பீட்டில் அர்த்தமிழந்து விடுகின்றன. ஆ.மாதவனின் படைப்புகளில் எங்கும் வியாபித்திருப்பது இது ஒன்றே. பொருளுக்காக உடைபடும் சமூக மதிப்பீடுகள் சாலைத் தெருவைப் பொருத்தமட்டில் வெகு இயல்பானதுதான்.

**நிறைவுரை**

ஆ.மாதவனின் படைப்புகள் பெரும்பாலும் சரிகின்ற மானிட மதிப்பீடுகளில் கவனத்தைக் குவிப்பதாகவே உள்ளன. ஒவ்வொரு புனைகதையும் ஒவ்வொரு வகையான மானுடக் கீழ்மையை, அவலத்தை விளக்குவதாக உள்ளன. சாலைத்தெருவில் நிகழும் சுரண்டல், வறுமை, பாலியல் சீரழிவுகள், குடி, வன்முறை, பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள், அதிகாரத்தின் கைகளுக்குள் சிக்கித் தவிக்கும் அடித்தட்டு மக்களின் இயலாமைகள் என

மானுட மதிப்பீட்டைக் குலைக்கும் இடங்கள் வெகு இயல்பாகக் கடந்து போகின்றன. இதனை எளிமையானதாகவும் மேலோட்டமானதாகவும் நாம் கடந்து போக முடியாது. காரணம் நாம் காணக்கூடிய இத்தகைய யதார்த்த உலகின் காட்சிகளையும், மனிதர்களையும், சம்பவங்களையும், புனைவாக்கும் போது ஆ.மாதவன் மேற்கொள்ளும் படைப்பு முயற்சியின் வெளிப்பாடு. இவ்வெளிப்பாட்டை முன்வைத்துப் பார்க்கும் அவரின் படைப்பு வெளியை, அந்த இயல்புகளை மானுட மதிப்பீடுகள் சார்ந்து விவாதிக்க முடிகிறது.

## துணைநின்ற நூல்கள்


1. சிவத்தம்பி, கா., (1983), தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.
2. பக்தவத்சல பாரதி (2008), தமிழர் மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், புதுச்சேரி.
3. பொன்னீலன், (2007), ஜீவா என்றொரு மானுடன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. மாதவம், (ஆகஸ்ட் 2016), மாத இதழ், இராசாக்கமங்கலம், குமரி மாவட்டம் - 629502.
5. மாதவன், ஆ., (2016), கதைகள் (முழுத்தொகுப்பு), நற்றிணை பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை -5.
6. முத்து., சு., (2015), ஆ. மாதவன் இலக்கியத்தடம், அருள்பதிப்பகம், சென்னை -78.
7. ஜெயமோகன், (2010), கடைத் தெருவின் கலைஞன், ஆ. மாதவனின் புனைவுலகு, தமிழினி, சென்னை-14.
8. The Encyclopaedia Britannica: A Dictionary of Arts, Sciences, Literature and General Information, Volume 15, 2011.